அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். மேலும், நெசவாளர்களுடைய வாட்டத்தைப் போக்க வேண்டுமென்பதற்காகத்தான் புரட்சித் தலைவி அவர்கள் பல்வேறு புரட்சிகரமான திட்டங்களை உருவாக்கி, ஜனதா ரகத் துணிகளை உற்பத்தி செய்வதற்கு திட்டங்களை வகுத்து வருகிறார்கள். சில அரசியல்வாதிகள் அதற்குள்ளே நுழைந்துகொண்டு, நெசவாளர்களுடைய நலன்களைக் கருதாமல், கூலி உயர்வு என்று சொல்லி, போராட்டங்களை உண்டாக்கிக் கொண்டிருக்கிறார்களே தவிர, நெசவாளர்களுக்கு நன்மை செய்வதாக இல்லை என்பதை நான் வருத்தத்தோடு இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுப்பினர் கேட்ட கேள்விக்கு மாத்திரம் பதில் சொன்னால் போதும்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: இந்தத் துறையைப் பொறுத்த அளவில் நெசவாளர்களின் வாட்டத்தைப் போக்குவதற்காக பல்வேறு நடவடிக்கைகளை அரசு எடுத்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. விதி 110-ன் கீழ் வேளாண்மைத்துறை அமைச்சரின் அறிக்கை

கரும்பு விவசாயிகளுக்குக் கூடுதல் விலை அளித்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110-ன்கீழ் பேரவைக்கு ஒரு முக்கிய அறிக்கையை அளிக்க மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோரி இருக்கிறார்கள். அவருக்கு அனுமதி வழங்கி இருக்கிறேன். இப்போது பேரவை விதி 110-ன்கீழ் அந்த அறிவிப்பினைப் பேரவைக்கு அளிப்பார்கள்.

*மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற விதி 110-ன்கீழ் கூட்டுறவு மற்றும் பொதுத் துறையைச் சார்ந்த சர்க்கரை ஆலைகளுக்கு 1992—93ஆம் ஆண்டில் கரும்பு அளித்த விவசாயிகளுக்கு கூடுதல் கரும்பு விலை அளிப்பது பற்றிய அறிக்கை ஒன்றைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் ஆணைப்படி, 1992—93ஆம் ஆண்டில் கரும்பு அளித்த பதிவு பெற்ற விவசாயிகளுக்கு ஏற்கெனவே அரசு அறிவித்த மாநில அரசின் பரிந்துரை விலைக்கு மேலாக கீழ்க்கண்டவாறு கூடுதல் கரும்பு விலை அளிக்க, கீழ்க்காணும் கூட்டுறவு மற்றும் பொதுத் துறையைச் சார்ந்த சர்க்கரை ஆலைகளுக்கு அரசு ஆணை வழங்கியுள்ளது.

1993 அக்டோபர் 28] [திரு. கு. ப. கிருஷ்ணன்]

நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலை, தலை ஞாயிறு, தஞ்சை மாவட்டம்— ஒரு டன்னுக்கு 75 ரூபாய்; திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை 60 ரூபாய்; தர்மபுரி மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலை 50 ரூபாய்; கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை 50 ரூபாய்; சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை 45 ரூபாய்; மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை 35 ரூபாய்; அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை 20 ரூபாய்; வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை 20 ரூபாய்; ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை, செங்கல்வராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலை, நேஷனல் கூட்டுறவு சர்க்கரை ஆலை, அலங்காநல்லூர், மதுரை, திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை, மதுரா சர்க்கரை ஆலை, பெரம்பலூர் சர்க்கரை ஆலை ஆகியவற்றுக்குத் தலா டன்னுக்கு 10 ரூபாய் என்று வழங்கி ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு ஆண்டின் இறுதியில் அந்தந்த ஆலைகள் ஈட்டிய இலாபத்தைக் கணக்கில் கொண்டு கூடுதல் கரும்பு விலை கொடுப்பது மரபாகும். இதன்படி 14 கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகள் கூடுதல் கரும்பு விலையாக டன் ஒன்றுக்குக் குறைந்தபட்சம் ரூ. 10 ஆகவும், அதிக பட்சம் ரூ. 75 ஆகவும் வழங்க தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இன்று ஆணை வழங்கியுள்ளார்கள். இவ்வாண்டு இரண்டு இலட்சத்து இருபதாயிரம் கரும்பு விவசாயிகள் ரூ. 13.05 கோடியும் மொத்தக் கூடுதல் கரும்பு விலையாகப் பெறுவார்கள். இது கடந்தாண்டு கொடுத்த ரூபாயை விட ரூபாய் 6 கோடியே 48 இலட்சம் கூடுதலாகும். இப்பணம் கரும்பு விவசாயிகளுக்கு வரும் தீபாவளிப் பண்டிகைக்கு முன்பே வழங்கப்படும் என்ற இனிய செய்தியை இந்த மாமன்றத்திற்கு மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) நில ஆக்கிரமிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 1993ஆம் ஆண்டு தமிழ்நாடு நில ஆக்கிரமிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு.எஸ்.டி.சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' 1993ஆம் ஆண்டு தமிழ்நாடு நில ஆக்கிரமிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்'' எனக் கோருகிறேன்.